இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

வருடாந்த அறிக்கை

2018

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு
முகவரி: 46-48, கொட்டா வீதி
கொழும்பு 08

அட்டவணை

பக்க இல.

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்		3
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு உறுப்பினர்கள்		4
ஆணையாளர் செய்தி		5,6
1.	**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**	
1.1	அறிமுகவுரை	7
1.2	நோக்கு	7
1.3	பணி	7
1.4	குறிக்கோள்கள்	7
1.5	ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்	8,9
1.6	அமைப்பாண்மை கட்டமைப்பு	9
1.7	மனித வளங்கள்	11
2.	**2018 ஆம் ஆண்டில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் அமுல்படுத்துகை செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்**	
2.1	“சஹசக் நிமவும் 2018” தேசிய புத்தாக்க மற்றும் புதுக் கண்டுபிடிப்பு கண்காட்சி	12,16
2.2	ஜனாதிபதி விருதுகள்	17
2.3	தேசிய புத்தாக்குனர் தினத்தை கொண்டாடுதல்	17,19
2.4	நிபுணத்துவம் மிக்க மதிப்பீட்டாளர் குழாமிற்கு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்	20
2.5	பாடசாலை மட்டத்திலான புத்தாக்குனர்களின் திறனை விருத்தி செய்வதற்கான	20
2.6	புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு IAFM-SL கருத்திட்டம்	21
2.7	புத்தாக்கங்களுக்கான வர்த்தக ரீதியிலான அடிப்படையை தாபிப்பதற்கு “நவ நிபயும் திரிய நிகழ்ச்சித்திட்டம்”	21
2.8	புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்பவியல் ஆதரவினை வழங்கும் பொருட்டு தாபிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் அடைக்காப்பக நிலையங்கள் (Technology Incubation Centres)	22
2.9	இளம் புத்தாக்குனர்களுக்கான “புத்திளம் சிந்தனை 2018” (Innova Minds 2018) தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்	22
2.10	சர்வதேச புதுக் கண்டுபிடிப்பு போட்டியாளர்களுக்கான நுழைவு	23,26
2.11	சர்வதேச தொடர்பிணைப்பு	27
2.12	புத்தாக்குனர் சந்திப்பு	27
2.13	புத்தாக்குனர்களுக்கான முன்னரங்கு	27,31
2.14	புத்தாக்குனர்களுக்குரித்தான சேவைகள்	31
2.15	மனிதவள அபிவிருத்தி	32
2.16	நிதியியல் மூலதன வளர்ச்சி	33
2.17	இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு சொந்தமான தனித்தன்மை கொண்ட புலமைச் சொத்துக்கள்	34
3.	**நிதி யியல் கூற்று**	35,53

ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்

2018.01.01 இலிருந்து 2018.11.30 வரையிலுள்ள காலப்பகுதி

கலாநிதி. சி. மஹேஷ் எதிரிசிங்க
ஆணையாளர்

திரு. எச்.எம்.ஆர். கிரியல்ல
உதவி ஆணையாளர்

திருமதி. கல்பனி இராஜபக்ஷ
உதவி ஆணையாளர்

திரு. ஏ.வி. ஜனாதர
திறைசேரி பிரதிநிதி

2018.12.01 இலிருந்து 2018.12.31 வரையில்

திருமதி. டி. நந்தனி சமரவிக்கிரம
[மேலதிக செயலாளர் (நிர்வாகம்) - விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
ஆணையாளர்(தற்காலிக கடமை)

திருமதி. எல். சுரேக்கா எச். ஹேவகே
(சிரேட்ட உதவிச் செயலாளர் - விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு)
உதவி ஆணையாளர்(தற்காலிக கடமை)

திருமதி. ஏ.எல்.எஸ். நசீமா
[பணிப்பாளர் (திட்டமிடல்) - விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
உதவி ஆணையாளர்(தற்காலிக கடமை)

திரு. ஏ.வி. ஜனாதர
திறைசேரி பிரதிநிதி

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவின் உறுப்பினர்கள்

2018.01.01 இலிருந்து 2018.11.30 வரையிலுமுள்ள காலப்பகுதியில்

திரு. ஏ.வி. ஜனாதர
திறைசேரி பிரதிநிதி

திரு. எச். எம். ஆர். கிரியல்ல
உதவி ஆணையாளர்

திருமதி. கல்பனி இராஜபக்ஷ
உதவி ஆணையாளர்

திரு. எம். சி. கமகே
உள்ளக கணக்காய்வாளர் - விஞ்ஞான, தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சு

திருமதி. சி.பீ.ஆர். பண்டார
உள்ளக கணக்காய்வாளர் - விஞ்ஞான, தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சு

திருமதி. சுஜீவா டி சில்வா
கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் பிரதிநிதி

2018.12.01 இலிருந்து 2018.12.31 வரையிலுமுள்ள காலப்பகுதியில்

திரு. ஏ.வி. ஜனாதர
திறைசேரி பிரதிநிதி

திருமதி. எல். சுரேக்கா எச். ஹேவகே
[சிரேட்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) - விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
உதவி ஆணையாளர்

திருமதி. ஏ.எல்.எஸ். நசீமா
[பணிப்பாளர் (திட்டமிடல்) - விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு]
உதவி ஆணையாளர்

திருமதி. சி.பீ.ஆர். பண்டார
உள்ளக கணக்காய்வாளர் - விஞ்ஞான, தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சு

திருமதி. டபிள்யூ.பீ.எல்.எஸ்.ஆர். பெரேரா
கணக்காய்வாளர் நாயக திணைக்களத்தின் பிரதிநிதி

ஆணையாளரிடமிருந்து செய்தி



பேராசிரியர் ஆர். யு. ஹல்வதுர
ஆணையாளர்
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்ப, நிதியியல் சேவைகளுடன் சட்ட ஆதரவுகளை வழங்குதலையும் மற்றும் தேசத்தின் புதிது கண்டுபிடிக்கும் திறனை ஊக்குவித்தலையும் தனது குறிக்கோளாக கொண்டுள்ளது.

இந்த குறிக்கோள்களை சாதிக்கும் நோக்குடன் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக புத்தாக்குனர் ஊக்குவிக்கப்படுவது மட்டுமன்றி, இதன் மூலம் உருவாகும் ஒரு புத்தாக்க கலாச்சாரத்தின் மூலம் புதிய விடயங்களை கண்டுபிடிக்கக்கூடிய திறன் மிக்க தேசமும் நிர்மாணிக்கப்படுகிறது. புத்தாக்க கலாச்சாரத்தினூடாக புதிதுகளை கண்டுபிடிக்கக்கூடிய திறன் கொண்ட பிரசைகளை உருவாக்குவதனூடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் இக்குறிக்கோள்களின் மூலம் நன்மையடைவது புத்தாக்குனர் மட்டுமல்லவே. அதாவது இதனை எளிய வார்த்தைகளில் கூறினால் 'நவ நெபயும் மவன தெயக்' என்பதன் ஊடாக அதாவது "புது ஆக்கங்களினை உருவாக்கும் தேசம்" எனப்படுகின்ற ஒரு தேசமானது புத்தாக்குனர்களுக்கு மட்டுமன்றி முழு சமூகத்தினருக்கும் நன்மை பயக்கும்.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, அதனது சகல குறிக்கோள்களினையும் தாபிப்பதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளது என்பதுடன், இக் குறிக்கோள்களினை பூரணப்படுத்தும் நிமித்தம் குறித்துரைக்கப்பட்ட பல நிகழ்ச்சித்திட்டங்களினை ஆணைக்குழு அமுலாக்கம் செய்கின்றது. இவற்றுள் ஆணைக்குழுவினால் அமுலாக்கம் செய்யப்படுகின்ற, தேசிய புத்தாக்க மற்றும் புத்தாக்க கண்காட்சியான "சஹசக் நிமவும்" கண்காட்சி உயர் முன்னுரிமையை வகிக்கின்றது. 2012 ஆம் ஆண்டில் முதல் தடவையாக நடாத்தப்பட்ட இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஆம் ஆண்டில் ஏழாவது தடவையாக நடைமுறைப்படுத்துகை செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் நாடெங்கிலும் உள்ள, புத்தாக்குனர் ஆகுதற்கு சாத்தியமுள்ள, புத்தாக்குனர்களின் திறமைகள் தேசிய மட்டத்தில் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்டது என்பதுடன் ஏற்கனவே புத்தாக்குனர்களாக அறிமுகப்படுத்தப் பட்டவர்கள் அதிகூடிய அளவில் பயன்களை பெற்றுக்கொண்டவர்களாகின்றனர்.

புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதியியல் உதவிகளை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்திற்கு அமைவுற வழங்கும் நோக்குடன் "IAFM – SL" (இலங்கைக்கான புத்தாக்குனர் துரிதப்படுத்துகை நிதியீட்டு பொறிமுறை) மற்றும் 'நவ நிபயும் திரிய' எனும் பெயர்களில் இரு நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களினூடாக, நிபுணத்துவ குழாமினால் சிறந்ததாக மதிப்பீடு செய்யப்பட்ட புத்தாக்கங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்பவியல் ஆதரவுகள் வழங்கப்படுகின்றன. அத்துடன், புத்தாக்கங்களை மேலும் விருத்தி செய்வதற்கு உதவும் முகமாக, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, புத்தாக்க அடைக்காப்பக நிலையங்களை தாபித்துள்ளது. இதைவிட, புத்தாக்குனர்கள் அவர்களுடைய புத்தாக்கங்களை பூரணப்படுத்தும் நிமித்தம் அவர்கள் ஏனைய நிறுவனங்களுக்கு அவர்களின் ஆராய்ச்சிகளினை முன்னெடுப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இதைவிட புத்தாக்குனர்களுக்கு அவர்களின் நலன் கருதி, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது அவர்கள் காப்புரிமையை அவர்களது புத்தாக்கங்களுக்கு பெற்றுக்கொள்வதற்கு துணை புரிகிறது.

இலங்கை பாடசாலை சமூகத்தினரை இலக்காகக்கொண்டு ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட "Innvo minds" நிகழ்ச்சித்திட்டமானது அனைவரையும் கவரும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாக அமைந்தது. இது ஒரு காணொளி நிகழ்ச்சித்திட்டமாகும் என்பதுடன், இளம் புத்தாக்குனர்களுக்கு அங்கீகாரத்தை வழங்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாகவும் இது அமைகிறது என்பதுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தேசத்திற்கு பயனுள்ள வகையிலான புத்தாக்கங்கள் கண்டுபிடிக்கும்படி ஊக்குவிக்கப்படுகின்றது.

இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தினூடாக வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவுற முன்காப்புரிமையை பெற்றுக்கொண்ட புத்தாக்குனர்களுக்கு ஜனாதிபதி விருதுகளாவன ஒவ்வொரு வருடமும் வழங்கப்படுகின்றன. ஜனாதிபதி விருதுக்குரிய புத்தாக்கங்களாவன, அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்பட்ட நடுவர் குழாமினால் மதிப்பீடு செய்யப்படுகிறது.

மேலும், புத்தாக்குனர்களினால் முகம் கொடுக்கப்படும் சிக்கல்களை தீர்க்கும் முகமாக இடம்பெற்ற கலந்துரையாடல்களினைத் தொடர்ந்து, ஆணைக்குழுவினால் பல தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவையாவன, புத்தாக்குனர்களுக்கு சாத்தியமுடைய அதாவது வளர்ந்து வரும் புத்தாக்குனர்களுக்கு வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களினை ஒழுங்கமைப்பு செய்தல், சர்வதேச ரீதியாக இடம்பெறும் போட்டிகளில் புத்தாக்குனர்கள் பங்குபெறுவதற்கு பாதை வகுத்தல், ஒவ்வொரு வருடமும் 26 ஆம் திகதி புத்தாக்குனர் தினத்தை கொண்டாடுதல், புத்தாக்குனர்களுக்கு அடையாள அட்டையை வழங்குதல் மற்றும் புத்தாக்கங்கள் தொடர்பில் பொது விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களினை முன்னெடுத்தல் என்பனவாகும்.

ஆணைக்குழுவினைச் சார்ந்த பதவியணியினரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருந்தபோதிலும் அவர்களால் வழங்கப்பட்ட உறுதுணைகள் மட்டிலடங்காதவை என்பதுடன் ஆணைக்குழுவின் சகல செயற்பாடுகளிலும் முகாமைத்துவ சபையினால் வழங்கப்பட்ட ஊக்குவிப்பும் வழிகாட்டல்களும் மெச்சத்தக்கனவாக அமைந்தன என்பது பாராட்டப்படவேண்டிய தொன்றாகும்.

புத்தாக்க கலாச்சாரம் ஒன்றினை உருவாக்குவதனூடாக சுபீட்சம் மிக்க இலங்கையை நிர்மாணிக்க முயலும் இந்த முயற்சிகளில் பக்கபலமாக நிற்கும் ஒவ்வொருவருக்கும் எனது நன்றியை நான் தெரிவிப்பதோடு புதிது கண்டுபிடிக்கும் ஆற்றலினை மேம்படுத்துவதற்காக அமுலாக்கம் செய்யப்படும் சகல முயற்சிகளுக்கும் சகலரும் தமது பங்களிப்பை வலுவாக வழங்குவர் என நான் உறுதியாக நம்புகிறேன்.

1. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

1.1 அறிமுகவுரை

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, தேசத்தின் புத்தாக்கற்றிறனுக்கு ஆதரவு வழங்குவதுடன் ஊக்குவிப்பு செய்தலினை தனது பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தற்போது ஆணைக்குழுவானது விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் செயற்படுகிறது.

1.2 நோக்கு

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கத்தினூடாக சுபீட்சத்தை காணல்.

1.3 பணி

தேசத்திற்கு புத்தாக்க செயற்றினை கொண்டுவருவதில் தலைசிறந்த உந்து விசைப்பாளராக இருத்தல்.

கருத்துக்களை செயல்முறை சார் பிரயோகங்களில் மாற்றீடு செய்வதற்கு துணைமை செய்யும் செயன்முறையினது முன்னோடியாக இருத்தல்.

1.4 குறிக்கோள்கள்

1.4.1 இலங்கை பிரசைகளை புத்தாக்கம் மற்றும் புதுக்கண்டுபிடிப்புகளை செய்வதற்கு ஊக்குவித்தல்.

1.4.2 புத்தாக்குனர்களுக்கு, தொழில்நுட்பவியல் உதவி, நிதியுதவி மற்றும் சட்ட உதவிகளை வழங்கல்.

1.4.3 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தில் குறித்துரைப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளை முன்னெடுத்தல்.

1.4.4 மேற்கூறப்பட்ட சகல குறிக்கோள்களையும் சாதிப்பதற்கு தேவையான சகல செயற்பாடுகளையும் முன்னெடுத்தல்.

1.5 ஆணைக்குழுவின் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகள்

அ) புத்தாக்குனர்களின் புத்தாக்கங்கள் காப்புரிமை வழங்கப்படுதலிற்கு ஏற்புடையதா என உறுதி செய்துகொள்வதற்கு அவர்களின் புத்தாக்கங்களை பரிசிலித்து அவர்களுக்கு தொழில்நுட்பவியல் உதவிகளை வழங்கல் மற்றும் ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய புத்தாக்குனர்களுக்கு காப்புரிமை விண்ணப்பங்களை தயாரிக்க உதவி செய்தல்;

ஆ) ஆணைக்குழுவின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவுற காப்புரிமை பெற்றுக்கொண்ட புத்தாக்கங்களையும் மற்றும் காப்புரிமை பெறப்படாது நிலுவையாக இருக்கும் புத்தாக்கங்களையும் விருத்தி செய்வதற்கு, நேர்த்தியாக்குவதற்கு நிதியுதவிகளை வழங்கல்;

இ) ஆணைக்குழுவின் நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு அமைவுற இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் புத்தாக்குனர்களுக்கு, காப்புரிமைகளை பெற்றுக்கொள்வதற்கும் அவை சூறையாடப்படாது பாதுகாக்கப்படுவதற்கும் சட்ட ரீதியாக உதவியாக இருத்தல்;

ஈ) இலங்கைக்கு பயனளிக்கக்கூடிய புத்தாக்கங்களை அப்புத்தாக்கங்களின் முக்கியத்துவம் மற்றும் வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான சாத்தியத்தன்மை என்பவற்றை கருத்திற்கொண்ட பின்பு அவற்றை மேலும் உற்பத்தி செய்வதற்காக தேவையான நிதியுதவியை வழங்குவதற்கு அரசின் கீழடங்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு அவர்களுக்கு நீண்ட கால கடன் வழங்க பரிந்துரைத்தல்;

உ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களுக்கான சந்தையினை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் தேடிக்கொள்வதற்கு உதவியாக இருத்தல்;

ஊ) புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களின் பெறுமதியினை அவர்களுக்கு அறியச்செய்யும் வகையில் வருடாந்தம் கண்காட்சிகளை "புத்தாக்கங்களுக்கான ஜனாதிபதி விருது" எனும் தலைப்பில் நடாத்தி அந்த கண்காட்சி விழாவின் போது புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் பணப் பரிசையினையும் பதக்கங்களையும் வழங்குதல் என்பதுடன் இந்த விழாவின் போது, தெரிவுசெய்யப்படும் புத்தாக்கங்களாவன, விவசாயம், இரசாயனவியல், மருத்துவம், தேசிய பாதுகாப்பு, மருந்தகவியல், பௌதிகவியல், பாதுகாப்பு மற்றும் நலன்புரி பொதுப் பணிகள், போக்குவரத்து மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய துறைகளினை சார்ந்தவையாக இருத்தல் வேண்டும். அத்துடன் இந்த விருதுகளாவன இலங்கை சார் புத்தாக்குனர் என்றவகையில் முக்கியத்துவம் கொடுக்கப்படாது இலங்கையிலுள்ள சகல புத்தாக்குனர்களும் கருத்தில் கொள்ளப்பட்டு வழங்கப்படும்;

எ) ஒரு பொது ஆராய்ச்சி ஆய்வுகூடம் மற்றும் சோதனை நிலையத்தை தாபித்தல். அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்குனர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட தமது புத்தாக்கங்களை மேலும் சீர்படுத்திக் கொள்வதற்கு

இந்த ஆராய்ச்சிக் கூடங்களிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய சோதனை சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்;

ஏ) இலங்கை வாழ் மக்களிடையே புதிது புனைதல் மற்றும் படைப்பாக்கற்றிறன் என்பனவற்றை மேம்படுத்தவும் மற்றும் வருடாந்தம் இடம்பெறும் "ஆக்கற்றிறன் மிகு ஆராய்ச்சி போட்டியில்" "புத்தாக்கத்திற்கான ஜனாதிபதி விருது வைபவத்தின்" நடுவர்களால் மேலே பந்தி (ஊ) வில் கூறப்பட்டதும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய துறைகளில் புதிய படைப்புகளை படைத்தலில் துணைமையாக இருப்பதற்கும் மற்றும் அதில் வெற்றியாளர்களை தெரிவுசெய்து பணப்பரிசு மற்றும் பதக்கங்களை வழங்குவதற்கும்;


ஐ) புத்தாக்கம், ஆராய்ச்சிகள் மற்றும் பொதுவான விஞ்ஞானம் என்பனவற்றில் தகவல்களை பிரசுரித்தலும் பரப்புவதற்கு;

ஒ) புத்தாக்குனர்களிடையே கருத்துகளை பரிமாறிக்கொள்வதற்கு ஒரு ஒழுங்கு முறையில் மாதாந்தம் கூட்டத் தொடர்களை நடாத்துவதற்கு;

ஓ) புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கு இலங்கை புத்தாக்குனர்களுக்கு உதவுதல் அல்லது அத்தகைய போட்டிகளில் அவர்களை பங்குபெறச் செய்வதற்கு பரிந்துரைத்தல்; மற்றும்

ஔ) இலங்கை வாழ் இளைஞர்களிடையே படைப்பாற்றல் திறனை ஊக்குவிப்பதற்கு பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆக்கற்றிறன் சங்கங்களை ஒழுங்கமைத்தல்.

1.6 அமைப்பாண்மை கட்டமைப்பு



1.7 மனித வளங்கள்

பதவி	அங்கீகரிக்கப்பட்ட தொழில்நிலைப் பிரிவு	2018 ஆம் ஆண்டிற்கான தொழில்நிலைப் பிரிவு	2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான வெற்றிடங்கள்
பணிப்பாளர் (சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர்)	01	01	-
பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர்	02	02	-
பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர் (நிதி)	01	01	-
நிகழ்ச்சித் திட்ட அலுவலர்	03	01	02
நிர்வாக அலுவலர்	01	01	-
நிதியியல் அலுவலர்	01	01	-
ஆராய்ச்சி உதவியாளர்	05	04	01
முகாமைத்துவ உதவியாளர்	07	06	01
சாரதி	04	04	-
அலுவலக சிப்பந்தி	02	02	-



2. 2018 ஆம் ஆண்டில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் அமுல்படுத்துகை செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

2.1 "சஹசக் நிமவும் 2018" தேசிய புத்தாக்க மற்றும் புதுக் கண்டுபிடிப்பு கண்காட்சி

இலங்கை புத்தாக்குனர்களுக்கு அவர்களின் புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துகை செய்யப்படுவதற்கு அறிமுகப்படுத்தப்படுவதற்கான பாதையினை வகுக்கும் நிமித்தம் ஒழுங்கமைப்பு செய்யப்படும் தேசிய புத்தாக்க மற்றும் புதுக்கண்டுபிடிப்புகளுக்கான சஹசக் நிமவும் கண்காட்சியின் ஊடாக இவ் இலங்கை வாழ் புத்தாக்குனர்களின் புதிது கண்டுபிடிக்கும் திறன் மேலும் ஊக்குவிக்கப்படுகிறது. பல படிநிலைகளின் கீழ் நடைமுறைப்படுத்துகை செய்யப்படும் இந்த சஹசக் நிமவும் கண்காட்சி ஒரு விசேட நிகழ்ச்சித் திட்டம் ஆகும். நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் நியமனம் செய்யப்பட்ட நிபுணர் குழாமினைக் கொண்ட நேர்முகப் பரீட்சை குழாமினால் சஹசக் நிமவும் கண்காட்சியில் பங்குபற்றுவதற்கான மதிப்பீட்டு தகைமை நிலைகளுடன் ஒருங்கிணைந்த வகையில் முன்னெடுக்கப்படும் முதல்நிலை மட்டத்து மதிப்பீடுகளின் பின்னர் தெரிவுசெய்யப்படும் புத்தாக்குனர்கள் புத்தாக்கங்களின் கண்காட்சியில் பங்குபெறுவதற்கான வாய்ப்பினை பெறுவர்.

கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட பதின்நான்கு துறைகளினை (14) பிரதிநிதித்துவம் செய்யும் வகையில், பள்ளிக்கூடம், பல்கலைக்கழகமும் மூன்றாம் நிலைக்கல்வியும், வர்த்தக பிரிவு மற்றும் திறந்த பிரிவு ஆகிய பிரதான வகுதிகளில் புத்தாக்குனர்கள் தம்மை பிரசன்னம் செய்வர்.

- பொதுமக்கள் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் தேசிய பாதுகாப்பு
- இரசாயனவியல்
- உணவுத் தொழில்நுட்பம்
- மருத்துவம் மற்றும் மருந்தகவியல்
- பாரம்பரிய மருத்துவம்
- பொது கைத்தொழிற்துறை மற்றும் அக கட்டமைப்பு வசதிகள்
- பௌதிகவியல்
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- விவசாயம்
- பிரயோக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்
- சக்தி
- சூழல் பேணுதல்
- போக்குவரத்து
- எந்திரவியல்

“சஹசக் நிமவும்” கண்காட்சியில் பங்குபெறும் புத்தாக்குனர்கள் அதிக சிறப்பு சலுகைகளுக்கு உரித்துடையவர்களாகின்றனர். மேலும் இதன் மூலம் புத்தாக்குனர்களுக்கு தமது படைப்பாற்றற்றிறனையும் திறமையையும் முன்னளிப்பு செய்வதற்கும் அதுபோன்று தமது புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துகை செய்யப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கின்றது என்பதுடன் இதன் விளைவாக அவர்களுக்கு சர்வதேச ரீதியில் இடம்பெறுகின்ற புத்தாக்க கண்காட்சியில் பங்குபெறுவதற்கான வாய்ப்புக்களும் கிடைக்கப்பெறுவதுடன் அவர்கள் வெவ்வேறு பரிசில்களுக்கும் உரித்துடையவராக முடிகின்றது.

தேசிய புத்தாக்க மற்றும் புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சியான சஹசக் நிமவும் கண்காட்சியின் ஏழாவது கண்காட்சியானது 2018 செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதியிலிருந்து 16 ஆம் திகதி வரையில் கொழும்பு 10 இலுள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. தேசிய கண்காட்சியில் மாகாண ரீதியில் முன்வைக்கப்பட்ட ஆக்கங்கள் பற்றிய விபரங்கள் வருமாறு.

மாகாணம்	திகதி	இடம்
சப்ரகமுவ	2018 மே, 03 ஆம் திகதி	தொழில்நுட்ப கல்லூரி, இரத்தினபுரி
தெற்கு	2018 மே, 08 ஆம் திகதி 2018 மே, 09 ஆம் திகதி 2018 மே, 10 ஆம் திகதி	எந்திரவியல் பீடம், ருகுணு பல்கலைக்கழகம், காலி பௌதிகவியல் திணைக்களம், ருகுணு பல்கலைக்கழகம், மாத்தறை தொழில்நுட்ப கல்லூரி, மட்டக்களப்பு
கிழக்கு	2018 மே, 19 ஆம் திகதி	மகாஜனா கல்லூரி, மட்டக்களப்பு
வடக்கு	2018 மே, 21 ஆம் திகதி	கணணி திணைக்களம், யாழ் பல்கலைக்கழகம்
வடமத்திய	2018 மே, 25 ஆம் திகதி	தொழில்நுட்ப கல்லூரி, அநுராதபுரம்
ஊவா	2018 ஜூன், 02 ஆம் திகதி	விலங்கியல் பீடம், ஊவா வெல்லஸ்ச பல்கலைக்கழகம்
தென்மேற்கு	2018 ஜூன், 06 ஆம் திகதி	தொழில்நுட்ப கல்லூரி, குருனாகல்
மத்திய	2018 ஜூன், 09 ஆம் திகதி	விவசாய பீடம், பேராதெனிய பல்கலைக்கழகம்
மேற்கு	2018 ஜூன், 21 ஆம் திகதி 2018 ஜூன், 22 ஆம் திகதி 2018 ஜூன், 23 ஆம் திகதி 2018 ஜூன், 24 ஆம் திகதி	கையநோதயா பாடசாலை, களுத்துறை குருகுல கல்லூரி, களனி இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, கொழும்பு 08 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, கொழும்பு 08






மாகாண மட்டத்தில் புத்தாக்கங்களை மதிப்பிடல்

மதிப்பீடு செய்யப்படுவதற்கு மாகாண மட்டத்தில் முன்னளிப்பு செய்யப்பட்ட புத்தாக்கங்களும் அவற்றுள் தேசிய மட்டத்திற்கு தகைமை பெற்றவைகளும் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

மாகாணம்	பாடசாலைகள்		திறந்த		பல்கலைக்கழகம்		வர்த்தக பிரிவு		மொத்தம்	
	முன்னளிக்கப் பட்டவை களின் எண்ணிக்கை	தகைமை பெற்றவை களின் எண்ணிக்கை	முன்னளிக்கப் பட்டவை களின் எண்ணிக்கை	தகைமை பெற்றவை களின் எண்ணிக்கை	முன்னளிக்கப் பட்டவை களின் எண்ணிக்கை	தகைமை பெற்றவை களின் எண்ணிக்கை	முன்னளிக்கப் பட்டவை களின் எண்ணிக்கை	தகைமை பெற்றவை களின் எண்ணிக்கை	முன்னளிக்கப் பட்டவை களின் எண்ணிக்கை	தகைமை பெற்றவை களின் எண்ணிக்கை
சப்ரகமுவ	129	22	11	5	1	0	0	0	141	27
வடமத்தி	25	4	9	4	3	2	0	0	37	10
தெற்கு	252	36	58	16	41	4	2	2	353	58
தென்மேற்கு	52	7	15	5	9	2	0	0	76	14
கிழக்கு	115	19	46	8	16	11	0	0	177	38
வடக்கு	163	12	15	5	3	2	0	0	181	19
மத்திய	198	15	34	10	6	3	0	0	238	28
ஊவா	202	19	0	0	7	4	0	0	209	23
மேற்கு	262	31	102	27	19	4	4	2	387	64
இராணுவ தலைமை அலுவலகம்	-	-	198	30	-	-	-	-	198	30
மொத்தம்	1398	165	488	110	105	32	6	4	1997	311

பாடசாலை, பல்கலைக்கழகங்களும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களும், வர்த்தக பிரிவு மற்றும் திறந்த பிரிவு ஆகிய வகுதிகளில் மேற்குறிப்பிடப்பட்ட பதின்நான்கு (14) துறைகளில் முன்னளிப்பு செய்யப்பட்ட புத்தாக்கங்களுக்குள் முந்நூற்றி பதினொன்று (311) புத்தாக்கங்கள் புத்தாக்க மற்றும் புதுக் கண்டுபிடிப்பு கண்காட்சியான 'சஹசக் நிமவும்' கண்காட்சிக்கு தகைமை பெற்றுள்ளன.

2018 ஆம் ஆண்டின் சஹசக் நிமவும் தேசிய கண்காட்சியில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள்















2018 ஆம் ஆண்டின் 'சஹசக் நிமவும் கண்காட்சியில் மாகாண மட்டத்தில் பங்கு கொண்டோர்



பிரதான வகுதிகளில் பங்கு கொண்டோர்



2.2 ஜனாதிபதி விருதுகள்

தேசிய புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு சட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட விசேட விழாவே ஜனாதிபதி விருது வழங்கல் வைபவமாகும். தமது புத்தாக்கங்களுக்கு (புலமைச் சொத்துரிமையை) காப்புரிமையை பெற்றுக்கொண்ட புத்தாக்குனர்களின் புதிது கண்டுபிடிக்கும் திறனை பாராட்டும் முகமாக இந்த விருதுகள் வழங்கும் வைபவமானது வருடம் தோறும் நடைபெறுகிறது. அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டு குழாமானது, 14 தொழில்நுட்பவியல் துறைகளின் கீழும் முன்வைத்த புத்தாக்கங்களை மதிப்பீடு செய்து சிறந்த புத்தாக்கத்திற்கான விருதுகளை வழங்கும் அதேவேளையில் அவற்றுள் மிகச் சிறந்த புத்தாக்கமானது அதி சிறந்த புத்தாக்கமாக தெரிவுசெய்யப்பட்டு ஜனாதிபதி விருதுக்கு உரித்துடையதாகும். 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்குரிய ஜனாதிபதி விருதுகளாவன 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற வைபவத்தன்று வழங்கப்பட்டது. இந்த வைபவத்தின்போது 2015 ஆம் ஆண்டிற்குரிய அதி சிறந்த புத்தாக்கமாக திரு. லக்ஷ்மன் கொட்டேகொடவின் “கொலப்பு பொறுவ” எனப்படும் புத்தாக்கம் தெரிவுசெய்யப்பட்டு அதற்கு விருது வழங்கப்பட்டதுடன் மேலதிகமாக 38 ஏனைய புத்தாக்கங்களுக்கும் விருதுகள் வழங்கப்பட்டன.



மேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து 2015 ஆம் ஆண்டிற்குரிய அதி சிறந்த புத்தாக்கத்திற்குரிய விருதினை திரு. லக்ஷ்மன் கொட்டேகொட பெறுகிறார்.

2.3 தேசிய புத்தாக்குனர் தினத்தை கொண்டாடுதல்

புத்தாக்குனர்களால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஆற்றப்படும் பங்களிப்பினை பாராட்டும் முகமாக ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி தேசிய புத்தாக்குனர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் முதல் ஆணையாளரும் மிகச் சிறந்த திறமையுடைய எந்திரியுமான தேசபந்து கலாநிதி. ஏ.என்.எஸ். குலசிங்கவின் பிறந்ததினமான ஒக்டோபர் 26 ஆம் திகதியினை நினைவுபடுத்தும் முகமாகவும் அவரால் ஆற்றப்பட்ட அளப்பரிய சேவைக்கு நன்றி செலுத்தும் முகமாகவும் இத்தினம் புத்தாக்குனர் தினமாக

கொண்டாடப்படுகிறது. இதற்கமைவுற 3 வது தடவையாக தேசிய புத்தாக்க தினமானது, 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைபவ ரீதியாக நடைபெற்றது.

தேசிய புத்தாக்குனர் தினத்தை பிரகடனப்படுத்துவதன் நோக்கு

- புத்தாக்குனர்களை மதிப்பீடு செய்வதற்கு ஒரு புதிய செயன்முறையினை தயாரித்தல், புத்தாக்கம் சார்ந்த பொருளாதாரமொன்றிற்கு நாட்டை வழிநடத்தல் மற்றும் புதிது கண்டுபிடித்தலிற்கு அவர்களை தூண்டுதல்.

- புத்தாக்குனர்களுடன் நெருங்கிய தொடர்பினை பேணுவதற்கு ஆணைக்குழுவிற்கு வாய்ப்பினை வழங்கல்.

- புத்தாக்குனர் தினத்தை பிரகடனப்படுத்துவதன் மூலம் புத்தாக்குனர்களுக்கு புதிய முதலீட்டு வாய்ப்புகளை அடையாளப்படுத்திக் கொடுத்தல்.

- தேசிய புத்தாக்குனர் தினத்துடன் ஒருங்கிணைந்த வகையில் வருடாந்த விருது வழங்கல் வைபவத்தை ஒழுங்கமைப்பதன் ஊடாக, இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது அதிக வினைத்திறன் மிகுந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு செயற்றிறன் கொண்டதாக அமையும்.

- புத்தாக்கத்தினூடாக பொருளாதார விருத்தியினை காண்பதற்காக இலங்கை வாழ் புத்தாக்குனர்களுக்கு முன்னுரிமை வழங்கல்.

- விருதுகளை பெற்றுக்கொண்ட புத்தாக்குனர்களை இனம் காணல்.

புத்தாக்குனர் தினத்தில் பாராட்டப்பட்ட சஹசக் நிமவும் வெற்றியாளர்கள்

2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் இலங்கை கண்காட்சி மற்றும் ஒன்றுகூடல் நிலையத்தில் இடம்பெற்ற தேசிய புத்தாக்க மற்றும் புதுக் கண்டுபிடிப்பு கண்காட்சியான "சஹசக் நிமவும் " கண்காட்சியில் வெற்றிபெற்றவர்களுக்கான விருது வழங்கல் வைபவத்தின் ஏழாவது வைபவமானது தேசிய புத்தாக்குனர் தினக் கொண்டாட்ட நிகழ்வுடன் ஒருங்கிணைந்து இடம்பெற்றது.

ஒவ்வொரு தொழில்நுட்ப வகுதியினையும் சார்ந்த முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்புகளுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் காசுப் பரிசுகள் வழங்கப்பட்டதுடன் அதிசிறந்த புத்தாக்கத்திற்கு "டேசிஸ்" வெற்றிக் கிண்ணம், சான்றிதழ்கள் மற்றும் காசுப்பரிசுகள் என்பன வழங்கப்பட்டன. அரசன் இராவணனுக்கு "டாசிஸ்" எனும் ஒரு பட்டப்பெயரும் உண்டு. இவர் 'தடு மொனர' எனப்படும் ஆகாயத்தில் பறக்கின்ற புஷ்பக விமானத்தை வைத்திருந்தமை புதிய கண்டுபிடிப்புக்களில் ஒரு புரட்சி எனக் கூறலாம், என்பதுடன் இது வரலாற்றுக் காலத்திலிருந்த புதுக் கண்டுபிடிப்புக்களை ஊக்குவிக்க இடப்பட்டதொரு பாலமாகும்.

இந்த விருது வழங்கல் வைபவத்தின்போது பாடசாலை வகுதியில் பங்குபற்றிய புத்தாக்குனர்களின் வெற்றிக்கு பங்களித்த ஆசிரியர்களும் பாராட்டப்பட்டனர்.

சர்வதேச புத்தாக்குனர் போட்டிகளில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்வதற்கு வெற்றியாளர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படும்.

2018 ஆம் ஆண்டில் 'டேசிஸ்' வெற்றிக்கோப்பையை வெற்றிகொண்ட வெற்றியாளர்கள்



வர்த்தக பிரிவு

திரு. டபிள்யு.எம். ஜெயவர்த்தன

புத்தாக்கம் – விதைகளை நடுவதற்கும் உரமிடுவதற்கும் இயந்திரம்



பாடசாலை வகுதி

உதார தெளமிக்கா, மாத்தறை அக்குறுகொட கனிஷ்ட வித்தியாலயம்

புத்தாக்கம் – மரக்கறி மற்றும் பழங்களை கொண்டு செல்வதற்கான கொள்கலன்



திறந்த வகுதி

திரு. சி.எம். மனோரத்ன மற்றும் வைத்தியர். ஆர்.எம். தர்மதாச

புத்தாக்கம் – பழங்களில் மொய்க்கும் ஈயை விரட்ட சூழல் நட்பு மிக்கதொரு உற்பத்தி



அதிமேதகு ஜனாதிபதியுடன் விருதுபெற்ற வெற்றியாளர்கள்

2.4 நிபுணத்துவம் மிக்க மதிப்பீட்டாளர் குழாமிற்கு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்

முன்னளிப்பு செய்யப்பட்ட புத்தாக்கங்களுள் தரமான புத்தாக்கங்களை இனம் காண்பதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் மற்றும் வேறுபட்ட போட்டிகளையும் வருடம்தோறும் ஒழுங்கமைப்பு செய்கின்றது. இந்த மாபெரும் பணியானது, வேறுபட்ட துறைகளில் நிபுணத்துவத்தை கொண்டவர்களினால் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த தேவைப்பாட்டை பூர்த்தி செய்யும் நிமித்தம் இந்த குழாமிலுள்ள நடுவர்கள் ஒவ்வொரு வருடமும் இற்றைப்படுத்தப்படுவர் என்பதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018 ஆம் ஆண்டில் நடைமுறை படுத்துகை செய்யப்பட்டது. இது தொடர்பில் ஒரு பயிற்சிப் பட்டறையானது, 2018/09/12 ஆம் திகதியன்று இடம்பெற்றதோடு இதில் நிபுணர்கள் 45 பேர் கலந்துகொண்டனர்.





2.5 பாடசாலை மட்டத்திலான புத்தாக்குனர்களின் திறனை விருத்தி செய்வதற்கான பயிற்சிப்பட்டறை

'சஹசக் நிமவும்' தேசிய புத்தாக்க கண்காட்சிக்கு, பாடசாலை வகுதியில் தோற்றி தகைமை பெற்ற முந்நூற்றி ஐம்பது புத்தாக்குனர்கள் நிமித்தம் ஒரு திறன் விருத்தி பயிற்சிப்பட்டறையானது 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி நடாத்தப்பட்டது. சஹசக் நிமவும் கண்காட்சியில் பங்குபற்றிய சகல பங்குதாரர்களுக்கும் விருதுகளை பெற்றுக்கொள்வதற்கு சாத்தியம் இல்லாது இருந்த போதிலும் எதிர்காலத்தில் அவர்கள் விருதுக்கு உரியவர்களாக வேண்டும் என்பது கருத்திற் கொள்ளப்பட்டதினால் போட்டி என்பது கருத்திற் கொள்ளப்படாது அவர்களுக்கு அறிவு, வழிகாட்டல் மற்றும் புரிதல் நிலை என்பனவற்றை வழங்குதலே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்காகும்





2.6 புத்தாக்கங்களை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கு IAFM-SL கருத்திட்டம்

இலங்கை புத்தாக்குனர்களுக்கு உதவுவதன் மூலம் அவர்களது புத்தாக்கங்களிலிருந்து பெறப்படும் விளைவளவினை, வருமானம் பிறப்பிக்கக்கூடியதொன்றாக மாற்றி அதனை வர்த்தகமயப்படுத்துகை செய்வதற்கான பொறிமுறையொன்றினை நடைமுறைப்படுத்துகை செய்தல் அத்தோடு விஞ்ஞான தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் அந்த விளைவளவினை, இலங்கைக்கான புத்தாக்க விரைவுபடுத்துனர் நிதியீட்டு பொறிமுறை (IAFM-SL) நிதியத்தை பயன்படுத்தி மேலும் ஆய்வுக்கு உட்படுத்தல் போன்ற பொறுப்புக்களாவன இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் சட்டத்தில் குறித்துரைப்பு செய்யப்பட்டுள்ளவாறு புத்தாக்குனர்களுக்கு நிதியுதவி வழங்கி அவர்களின் புத்தாக்கத் திறனை மேலும் விரைவுபடுத்துவதற்கே இந்தப் பொறிமுறை நடைமுறைப்படுத்துகை செய்யப்படுகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவுற, நிதியுதவி வழங்கப்படுவதிலிருந்து அப்புத்தாக்கம் வர்த்தகமயப்படுத்துகை செய்யப்படும் வரையிலுள்ள சகல படிநிலைகளும் அவதானமாக கண்காணிக்கப்படும்.

2018 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்களுக்கான அழைப்புக்கள் தொடர்பில் புதினப்பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது என்பதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பனவற்றிற்கும் மற்றும் நேர் அமைச்சின் அகப்பாட்டெல்லைக்குள் அடங்கும் நிறுவனங்களுக்கும் அறியச் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஆணைக்குழுவிற்கு இருபத்தொரு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த சகல விண்ணப்பங்களும் தொழில்நுட்பவியல் குழுவிற்கு முன்வைக்கப்பட்டதுடன் நான்கு புத்தாக்குனர்களுக்கு ரூபாய் 9,127,600.00 வழங்கப்பட்டது.

2.7 புத்தாக்கங்களுக்கான வர்த்தக ரீதியிலான அடிப்படையை தாபிப்பதற்கு "நவ நிபயும் திரிய நிகழ்ச்சித்திட்டம்"

புத்தாக்கங்கள் வர்த்தகமயப்படுத்துகை செய்யப்படுவதற்கு ஆதரவு வழங்குதல் வேண்டும் என்ற அடிப்படையின் கீழ், புத்தாக்குனர்களுக்கு நிதியுதவி வழங்கல், புத்தாக்கத்தை விருத்தி செய்வதற்கு தேவைப்படும் தொழில்நுட்பவியல் உதவி, வட்டி இல்லா கடன்களை வழங்கல், புத்தாக்கத்தின் மூலவகை மாதிரியினை தயாரிக்க உதவுதல் மற்றும் செயற்றிறன் விருத்திக்கு ஆதரவு வழங்கல் போன்ற ஒரு தொகுதி நிகழ்ச்சித்திட்டங்களாவன "நவ நிபயும் திரிய - புத்தாக்க மானியத்திட்டம்" எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துகை செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து ரூபாய் ஒரு மில்லியன் பெறுமதியான கடன்களும் மற்றும் ரூபாய் 13,680,910.00 பெறுமதியான நிதியுதவியினையும் வழங்குவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

2.8 புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்பவியல் ஆதரவினை வழங்கும் பொருட்டு தாபிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் அடைக்காப்பக நிலையங்கள்

புத்தாக்கத்தை மேலும் விருத்தி செய்து, வர்த்தகமயப்படுத்துகை செய்யக்கூடிய நிலைக்கு கொண்டுவருதல் பொருட்டு தேவையான தொழில்நுட்ப உதவியினை வழங்கும் பொருட்டு இந்த அடைக்காப்பக நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. ஜாஎலயில் உள்ள தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்திலும் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் என ஏற்கனவே இரண்டு அடைக்காப்பக நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

2018 ஆம் ஆண்டிற்கான தொழில்நுட்பவியல் அடைக்காப்பகங்களை தெரிவுசெய்தல் நிமித்தம் 05 பல்கலைக்கழகங்களிலிருந்து கருத்திட்ட பிரேரணைகளுக்கான மதிப்பீடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் இவை தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளும் பூரணப்படுத்தப்பட்டன. அத்துடன் தொழில்நுட்பவியல் அடைக்காப்பகங்களை தாபித்தல் பொருட்டு, ரஜரட்ட பல்கலைக்கழகத்திலிருந்தும் ருஹுணு பல்கலைக்கழகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்திட்ட பிரேரணைகளிலுருந்த அடிப்படை கருத்துக்களுக்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டது. இந்தப் பிரேரணைகளை விருத்தி செய்து ஆணைக்குழுவிற்கு கையளிக்கும்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மேலும் இது தொடர்பில் ரூபாய் 35 மில்லியன் நிதியம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2.9 இளம் புத்தாக்குனர்களுக்கான "புத்திளம் சிந்தனை 2018" (Innova minds 2018) தொலைக்காட்சி நிதழ்ச்சித் திட்டம்

இளம் புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவந்து நடைமுறைப்படுத்துகை செய்வதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டதே இந்த "புத்திளம் சிந்தனை" எனப்படும் நிகழ்ச்சித்திட்டமாகும். 2018 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட "புத்திளம் சிந்தனை 2018" எனப்படும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கு, புத்தாக்கத்தை உற்பத்தித் திறன் மிக்க முறையில் வடிவமைத்து அவற்றினை வர்த்தகமயப்படுத்துகை செய்வதன் மூலம் தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தலே ஆகும். 'சஹசக் நிமவும் 2017" ஆம் ஆண்டில் தொழில்நுட்ப வகுதியில் விருதினை வெற்றிகொண்ட வெற்றியாளர்களுக்கு, இந்த நிகழ்சித்திட்டத்தில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் பல படிநிலைகளின் கீழ் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது. இந்தப் படிநிலைகளின் முதற்கட்டம், இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் துணையுடன் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு தொழில்நுட்பவியல் அறிவினை வழங்கக்கூடிய அடைக்காப்பக நிலையங்களின் உதவியுடன் இந்த புத்தாக்கங்களாவன வர்த்தக மட்டத்திற்கு தேவைப்படும் வகையில் மேலும் விருத்தி செய்யப்படுவதற்காக ஆயத்தப்படுத்தப்படலாகும். அதன் பின்பு இந்த புத்தாக்கங்களாவன ஒரு மதிப்பீட்டு செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டு மேலும் விருத்திசெய்தல் தொடர்பில் ஆய்வு செய்யப்படும். அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளினை பூர்த்தி செய்யும் புத்தாக்கத்திற்கு "புத்திளம் சிந்தனை 2018" எனப்படும் நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.

.

பத்து நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய இந்த "புத்திளம் சிந்தனை 2018" எனப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திலும் மூன்று இளம் புத்தாக்குனர்கள் பங்குபெறுவர் என்பதுடன் போட்டியினை இரு குழாமினரால் முதல் சுற்றுப் போட்டி மற்றும் இறுதிச் சுற்றுப் போட்டி என்ற அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும். முதல் சுற்றுப் போட்டியானது நாவலயில் உள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02, 03 மற்றும் 04 ஆம் திகதிகளில் இடம்பெற்ற அதேவேளையில் இறுதிச் சுற்றுப் போட்டியானது 2018 நவம்பர் மாதம் 28 ஆம் திகதி மாலபேயிலுள்ள இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவக வளாகத்தில் இடம்பெற்றது. களுத்துறையிலுள்ள ஞானோதய மகாவித்தியாலயத்தைச் சார்ந்த சந்தலு செனவிரட்ன எனும் மாணவரின் "automated side support for motorcycles" எனப்படும் புத்தாக்கமானது, "புத்திளம் சிந்தனை 2018" நிகழ்ச்சித்திட்டத்தில் முதல் பரிசை வென்றெடுத்தது. "Electronic Induction Coil and Spectral machine" எனப்படும் புத்தாக்கத்தை கண்டுபிடித்த, அரங்கல இரண்டாம் நிலைப் பள்ளியினைச் சார்ந்த நதீசா தென்னக்கோன் என்பவரின் புத்தாக்கம் இரண்டாம் பரிசையும் "Hybrid Gas Cooker" எனும் புத்தாக்கத்தைக் கண்டுபிடித்த, மியூசியஸ் கல்லூரியினைச் சார்ந்த மாணவி திவின்யா பிரேமரட்ன எனும் மாணவியின் புத்தாக்கமானது, மூன்றாம் பரிசையும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் வென்றெடுத்தனர்.



"புத்திளம் சிந்தனை 2018" விசேட நிகழ்வு

2.10 சர்வதேச புதுக் கண்டுபிடிப்பு போட்டியாளர்களுக்கான நுழைவு

இலங்கை புத்தாக்குனர்களின் திறமைகளை சர்வதேச மட்டத்திற்கு கொண்டுவருவதற்கான வழிகாட்டல்களை இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு வழங்குகிறது. இந்த வழிகாட்டல்களின் மூலம் இலங்கை புத்தாக்குனர்கள் சர்வதேச தரத்தினை அடைவதன் மூலம் சர்வதேச போட்டிகளில் பங்குபற்றுவதால் பெறக்கூடிய அனுபவ அறிவினை மட்டும் பெற்றுக்கொள்வதில்லை. அதனோடு, அவர்கள் வேறுபட்ட தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவினையும் பெற்றுக்கொள்கின்றனர். பலதரப்பட்ட புத்தாக்குனர்களுடன் இணைந்து பணியாற்றுவதால் அறிவுப் பகிர்வின் மூலம் புதிய அறிவினையும் பெற்றுக்கொள்கிறார்கள்.

❖ 46 வது ஜெனிவா சர்வதேச புத்தாக்குனர் போட்டி

2018 ஆம் ஆண்டில் சுவிஸ்லாந்திலுள்ள ஜெனிவாவில் இடம்பெற்ற பிலபல்யமான புத்தாக்க போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய புத்தாக்குனர்கள் மூன்று (03) தங்கப்பதக்கங்களையும் மூன்று (03) வெள்ளிப்பதக்கங்களையும் பெற்றெடுத்து வெற்றியீட்டினர்.

புத்தாக்கம்	புத்தாக்குனர்	விருது
Nasal Airflow Detection and Flow Rate Measuring System	வைத்தியர். மகேஷ் எதிரிசிங்க திமிர திலகரட்ன	தங்கப்பதக்கம்
Accessory Device of Nebulization for Intubated Patients	வைத்தியர். பி.வி.கே.எம். போபெத்த	தங்கப்பதக்கம்
High efficient handle	நாலகா சந்திரவன்ச	தங்கப்பதக்கம்
CeyBee - Autonomous Multipurpose Ultralight Drone	பேராசிரியர் ரோஹான் முனசிங்க மற்றும் குழுவினர்	வெள்ளிப்பதக்கம்
Informative Touch System for Blinds	பிரின்ஸ் சந்திரசேன	வெள்ளிப்பதக்கம்
The Machine with Automated Cylinder and Locks to get Coconut Fiber	ரெக்சி குமார் பர்னாந்த	வெள்ளிப்பதக்கம்
Green Leaf Medicinal Herbal Antismoker Mouth Liquid	வைத்தியர். என்.ஆர்.பி. நிஷ்ஷங்க	வெண்கலப்பதக்கம்
Lightning Earthing System	டீ.எச்.எம். ஹெட்டிஆராய்ச்சி	வெண்கலப்பதக்கம்

❖ கொரிய சர்வதேச இளைஞர் ஒலிம்பியாட் (KIYO 2018)

தேசிய புத்தாக்க மற்றும் புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சியான "சஹசக் நிமவும் 2017" கண்காட்சியில் தொழில்நுட்ப வகுதியில் இரண்டாம் இடத்தில் வெற்றி பெற்ற இளம் புத்தாக்குனர்களுக்கு 2018 ஆகஸ்ட் மாதம் 10 - 12 ஆம் திகதி வரையில் தென்கொரியாவில் இடம்பெற்ற KIYO 2018 இல் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் இரு தங்கப்பதக்கங்கள், இரு வெள்ளிப்பதக்கங்கள் மற்றும் ஒரு வெண்கலப்பதக்கத்தை வெற்றி கொண்டனர்.

❖ சர்வதேச புலமைச் சொத்து புத்தாக்கம், புதுக்கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி (IPITEx 2018)

2018 பெப்ரவரி மாதம் 02 - 06 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற இந்த புதுக்கண்டுபிடிப்பு கண்காட்சியின்போது ஷானிகா நிலோகா என்பவரினால் கண்டுபிடிக்கப்பட்ட "Anti-Lock Accelerator System for Non-Electrical Motorbikes" இற்கு ஒரு தங்கப்பதக்கம் மற்றும் உலக அதிபுலமை சொத்து அலுவலகத்தினால் ஒரு சிறப்பு விருதும் வழங்கப்பட்டது. சாமிக்கா சசேல மற்றும் சுபுன் சமல்கா ஆகியோரினால் கண்டுபிடிக்கப்பட்ட "Innovative Holding Device for Jewelry Soldering" எனப்படுகின்ற புத்தாக்கத்திற்கு ஒரு வெள்ளிப்பதக்கமும் மனிலா இளம் புத்தாக்குனர் சபையிடமிருந்து ஒரு தங்கப்பதக்கமும் கிடைக்கப்பெற்றது. மஞ்சுளா விஜயசுந்தர மற்றும் பிரவீன் அழககோன் என்போர்களால் கண்டுபிடிக்கப்பட்ட "Automated Solar Tracking Telescope" இற்கு பொலிடெக்னிகா பல்கலைக்கழகம் தங்கப்பதக்கத்தை வழங்கியது. "Indicator Fuse" எனப்படும் புத்தாக்கத்தை கண்டுபிடித்த அயோத்யா விக்ரமரத்ன விற்கு வெண்கலப்பதக்கம் ஒன்றும் ருமேனியன் விசேட விருதும் வழங்கப்பட்டது. "Maths Helper" எனப்படும் புத்தாக்கத்தை கண்டுபிடித்த மனோஜ் குமார் என்பவருக்கு வெண்கல விருதும் மகளிர் புத்தாக்க சபையினால் ஒரு விசேட் விருதும் வழங்கப்பட்டது.

❖ சிலிக்கன் பள்ளத்தாக்கு சர்வதேச புத்தாக்க விழா(SVIIF) 2018

ஐக்கிய அமெரிக்காவில் கலிபோனியா எனுமிடத்தில் ஜூலை மாதம் 02 - 04 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற SVIIF-2018 இல் வைத்தியர். மகேஷ் எதிரிசிங்க மற்றும் திமிர திலகரட்ன ஆகியோரினால் இணைந்து கண்டுபிடித்த "Nasal Airflow Detection and Flow Rate Measuring System" எனப்படும் இப்புத்தாக்கமானது முன்னளிப்பு செய்யப்பட்டதுடன் இதற்கு தங்கப்பதக்கம் விருதாக கிடைக்கப்பெற்றது.

❖ உலக புத்தாக்க மற்றும் தொழில்நுட்ப கண்காட்சி 2018

2018 மார்ச் மாதம் 12 – 14 ஆம் திகதி வரையில் இடம்பெற்ற புத்தாக்குனர் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 05 புத்தாக்குனர்கள் பங்குபற்றியதுடன் இவர்கள் நான்கு தங்கப்பதக்கங்கள், ஒரு வெள்ளிப்பதக்கம் என்பனவற்றை வர்த்தகப்பிரிவின் வகுதியின் கீழ் வென்றெடுத்தனர். திரு. டெஸ்மன் முனசிங்க என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட "Hybrid Electronic Ignition Tester" எனப்படும் புத்தாக்கமானது வர்த்தகப்பிரிவின் கீழ் சிறந்த புத்தாக்கமாக கருதப்பட்டு அதற்குரிய விருது வழங்கப்பட்டதோடு தங்கப்பதக்கத்தையும் வென்றெடுத்தது. திரு. அசிரி டில்ஹான் டி சில்வாவினால் கண்டுபிடிக்கப்பட்ட "Pest Repellent Eco Table Mat" எனப்படும் புத்தாக்கத்திற்கும், "Kitchen Sink Unblocker Unit" இனை கண்டுபிடித்த திரு. பெனட் சிறிமன்னவினது கண்டுபிடிப்புக்கும், "Auto Voltage Security System"

புத்தாக்கத்தை கண்டுபிடித்த திரு. சனத் சூரியாராய்ச்சிக்கும் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. “Bath Emollient” எனப்படும் புத்தாக்கத்தை கண்டுபிடித்த திரு. ஜானக கொடுவேகெதர என்பவருக்கு வெள்ளிப்பதக்கம் வழங்கப்பட்டது.

❖ உலக புதுக்கண்டுபிடிப்பு புத்தாக்க போட்டி (WiC) 2018

2018 ஜூன் மாதம் 02 மற்றும் 03 ஆம் திகதிகளில் கொரியாவில் சென்ல் எனப்படும் இடத்தில் இடம்பெற்ற உலக புதுக்கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்க போட்டியில் (WiC) முன்னளிப்பு செய்யப்பட்ட புத்தாக்கங்களுக்கு ஆறு தங்கப்பதக்கங்களும் எட்டு வெள்ளிப்பதக்கங்களும் வழங்கப்பட்டன.

புதுக்கண்டுபிடிப்பு	புத்தாக்குனர்	விருதுகள்
Nasal Airflow Detection and Flow Rate Measuring System (Group Invention)	வைத்தியர். சீ. மகேஷ் எதிரிசிங்க திரு. ஏ. தமிரா திலகரட்ன	தங்கப்பதக்கம்
Pest Repellent Eco Table Mat	அசிரி டில்ஹான் டி சில்வா	தங்கப்பதக்கம்
Advance Counterfeit Detector	அசிரி டில்ஹான் டி சில்வா தினேஸ் சம்பத் தெனிபிடிய	தங்கப்பதக்கம்
Accessory Device of Nebulization for Intubated Patients	கமீரா சம்பத் பொபெத்த	தங்கப்பதக்கம்
Kitchen Sink Unblocker Unit	பெனட் சிறிமன்ன	தங்கப்பதக்கம்
Informative Touch System for Blinds	பிரின்ஸ் சந்திரசேன	தங்கப்பதக்கம்
Liquid Level Sensor for Blind People	பிரின்ஸ் சந்திரசேன	வெள்ளிப்பதக்கம்
Coconut Printing Lansa	கிறிஷாந்த தேசப்பிரியா	வெள்ளிப்பதக்கம்
The Machine with Automated Cylinder and Locks to get Coconut Fiber	ரெக்ஷி குமார்	வெள்ளிப்பதக்கம்
Energy Saving Cooking Vessel	பிரசன்னா விதானகே	வெள்ளிப்பதக்கம்
Hybrid Electronic Ignition Tester	தஸ்மன் முனசிங்க	வெள்ளிப்பதக்கம்
Walking Charger	சத்துர மதுமால்	வெள்ளிப்பதக்கம்
Fruit Plucking Tool	விஜயகுமார் விஜித் குமார் விஜயகுமார் கேசன் குமார்	வெள்ளிப்பதக்கம்
Rolls Machine	திமித் நவோத்யா	வெள்ளிப்பதக்கம்

2.11 சர்வதேச தொடர்பிணைப்பு

புத்தாக்குனர்களுக்கான சபையின் சர்வதேச சம்மேளனம் – IFIA மற்றும் உலக புத்தாக்குனர் அதி புலமை சொத்து சபை - WIIPA ஆகியவற்றில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது உறுப்புரிமை பெற்றதைத் தொடர்ந்து, ஏனைய நாடுகளில் இடம்பெறும் புத்தாக்குனர் போட்டிகளில் பங்குபெறுவதற்கு அதிக வாய்ப்புகளை இலங்கை சார் புத்தாக்குனர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

2.12 புத்தாக்குனர்களுக்கான முன்னரங்கு

புத்தாக்குனர்களின் பிரச்சனைகளை இனம் கண்டு அவர்களுக்கு உரிய தீர்வை வழங்குவதற்கானதொரு நிகழ்ச்சித்திட்டமானது இலங்கை மன்றக் கல்லூரியில் 2018 மார்ச் மாதம் 29 ஆம் திகதி இடம்பெற்றதுடன் இதில் 151 புத்தாக்குனர்கள் பங்குபற்றினர்.





2.13 புத்தாக்கம் மற்றும் சேவை விநியோகம் பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்

ஒரு நாட்டின் பொருளாதார விருத்தி அதுபோன்று சமூக விருத்தி என்பன அந்நாட்டு மக்களின் அறிவு, நடத்தைகள் மற்றும் திறன் என்பனவற்றை சார்ந்துள்ளது. ஒரு நாட்டு மக்களின் புதிது கண்டுபிடிக்கும் ஆற்றலினை விருத்தி செய்வதன் ஊடாக, ஒரு நாட்டில் விருத்தி செய்யப்படுதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படும் புத்தாக்க கலாச்சாரம் என்ற நிலையினை ஒரு நாட்டில் உருவாக்குதல் இயலும்.

இந்த எதிர்பார்ப்பினை யதார்த்தமாக்கும் முனைவுடன் அதீத அளவில் தனது பங்களிப்பை வழங்கும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, நாடெங்கிலும் உருவாக்கப்படும் புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பில் பல விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதைத் தொடர்ந்து, சகல ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கியவகையில் ஒரு விழிப்புணர்ச்சித் திட்டமானது ஒழுங்கமைப்பு செய்யப்பட்டதுடன் இதில் ஆயிரத்தெட்டு புத்தாக்குனர்கள் பங்குபற்றினர். இதில் பங்குபற்றிய புத்தாக்குனர்களின் தனித்தன்மை யாதெனில் இவர்கள் வயதில் மற்றும் சமூக மட்டத்தில் வேறுபட்ட வகுதிகளை கொண்டிருத்தல் ஆகும்.

.













இலங்கையின் எதிர்கால தலைவர்களாகவுள்ள பாடசாலை மாணவர்களுக்காக விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன், நொச்சியாகமத்தை சார்ந்த விதாதர்ஷா மகா வித்தியாலயம், கொழும்பு நாலந்தா கல்லூரி, கோத்தமி பாலிக்கா வித்தியாலயம், டி.எஸ். சேனநாயக்க வித்தியாலயம், நாமினிஓயா இரண்டாம் நிலைப்பள்ளி, மாவனல்ல தறுல் உலூம் மத்திய கல்லூரி மற்றும் இலங்கை – ஜேர்மன் தொழில்நுட்பவியல் பயிற்சி நிலையம் ஆகியவற்றிற்கு விசேட விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.






கொழும்பிலுள்ள தேவி பாலிகா வித்தியாலயம், இரத்தினபுரியிலுள்ள கிரில்லே மத்திய கல்லூரி, கொழும்பிலுள்ள சிறிமாவோ பண்டாரநாயக வித்தியாலயம் மற்றும் கம்பஹவிலுள்ள புனித சிலுவைக் கல்லூரி என்பனவற்றில் இடம்பெற்ற புத்தாக்குனர் போட்டிக்கு நடுவர் குழாமானது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டதன் ஊடாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது இச்செயற்பாடுகளில் சிறப்பாக பங்குபற்றியது.










புத்தாக்கங்கள் தொடர்பிலான சகல விசேட நிகழ்ச்சித்திட்டங்களும் கொழும்பிலுள்ள சம்பத் வங்கி தலைமை அலுவலகத்திலும் காலியிலுள்ள பிரதேச செயலக தலைமை அலுவலகத்திலும் கொழும்பிலுள்ள தேசிய ஆராய்ச்சி மன்றத்திலும் இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள றோயல் கல்லூரியினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட “Spark 2018” எனப்படும் புத்தாக்கங்களை மதிப்பீடு செய்கின்ற கண்காட்சிக்கு தனது முழு ஆதரவினை புத்தாக்குனர் ஆணைக்குழு வழங்கியது. அத்துடன், இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட அகில இலங்கை புத்தாக்க கண்காட்சியினது நடுவர் குழாமில் பங்குகொள்வதனூடாக புத்தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு தனது பங்களிப்பை வழங்கியது.





மேலும் பட்டப்பயிலுனர்களின் புத்தாக்க ஆராய்ச்சி கருத்தரங்குகளாவன மதிப்பீடு செய்யப்படுவதற்கு பங்களிப்பு செய்யப்பட்டதோடு இது பேராதனை பல்லைக்கழகத்தினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.





மட்டக்குழியவிலுள்ள உயர் தேசிய எந்திரவியல் டிப்ளமா நிறுவகத்தில் புத்தாக்கம் தொடர்பில் பயிற்சிப்பட்டறை ஒழுங்கமைப்பு செய்யப்பட்டது.





2.14 புத்தாக்குனர்களுக்குரித்தான சேவைகள்

புத்தாக்குனர்களுக்கு தன்னால் இயன்ற அளவுக்கு சேவைகளை ஆகக்குறைந்தளவில் மனிதவலுவினை பயன்படுத்தி வழங்குவதற்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்டதொரு நிறுவனமே இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவாகும். ஆணைக்குழுவானது தனக்கென சொந்தமாக ஒரு ஆய்வுகூடத்தை கொண்டிராதபோதிலும், புத்தாக்குனர்களுக்கு தமது ஆராய்ச்சிகள் தொடர்பிலான தேவைகளை பூர்த்தி செய்வதற்கு வேறுபட்ட வழிகளில் தன்னால் இயன்ற அளவில் உதவிகளை புத்தாக்குனர்களுக்கு வழங்கி அவர்களுக்கு உறுதுணையாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு செயற்படுகிறது. இத்தகைய ரீதியிலான செயற்பாடுகளில் ஒன்பது மேற்கூறப்பட்ட வகையில் அடைக்காப்பக நிலையங்களை தாபித்தலாகும்.

இதைவிட புத்தாக்குனர்கள், அவர்களது ஆராய்ச்சிகளின் நிமித்தம், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆர்தர் சி. கிளார்க் நிலையம் ஆகிய நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றனர். புத்தாக்குனர்கள் அவர்களின் புத்தாக்கங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சிகள் தொடர்பிலான செலவினத்தை ஆணைக்குழு மீள் நிரப்பல் செய்கின்றது.

2.15 மனிதவள அபிவிருத்தி


இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினை சார்ந்த செயற்றிறன் மிக்க பதவியணியினர் புத்தாக்குனர் தொடர்பில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆற்றும் பெறுமதி மிக்க அதீத அளவிலான சேவைகளாவன நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை சாதிப்பதற்கு பக்கபலமாக அமைகின்றன. ஆதலினால், புத்தாக்குனர்களுக்கு இன்னும் அதிகளவில் வினைத்திறன்மிக்க தரமான சேவைகளினை பதவியணியினர் வழங்குவதற்கு அவர்களின் செயற்றிறனை மேம்படுத்தும் நிமித்தம் அவர்களுக்கு வேறுபட்ட வகையினைச் சார்ந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.


“முகாமைத்துவ உதவியாளரால் பேணப்படவேண்டிய ஆவணங்கள்” என்ற தலைப்பில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் இரு அலுவலர்களும், “தகவல் தொழில்நுட்ப கருவிகளின் பெறுகையும் அவற்றின் மதிப்பீடும்” என்ற தலைப்பில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் ஒரு அலுவலரும், “நிறுவன ரீதியிலான ஒழுக்க வேலை செயன்முறைகள்” என்ற தலைப்பில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் இரு அலுவலர்களும், “சரியான பழக்க நடக்கை தொடர்பில் ஊக்குவித்தல்” என்ற தலைப்பில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் மேலும் இரு அலுவலர்களும் மற்றும் “அலுவலக கருவிகளினை கட்டுப்படுத்தல்” என்ற தலைப்பில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் இரு அலுவலர்களும் பங்குபற்றினர். இதைவிட, “அலுவலக சிப்பந்திகளின் மற்றும் சாரதிகளின் பழக்க நடக்கை மற்றும் திறன் அறிவினை மேம்படுத்தல்”, “பயனுறுதி மிக்க அரச சேவைக்கான கணக்கியல்”, “விஞ்ஞானம், பொருளியல் மற்றும் பாதுகாப்பாக வாகன ஓட்டல்”, “வினை முயலுனரின் கருத்திட்டங்கள் மற்றும் நிறுவன ரீதியிலான முகாமைத்துவம் பற்றிய சர்வதேச பயிற்சிப்பட்டறை” மற்றும் “விடுமுறைகளை பதியும் எழுதுவினைஞர்களின் கடமைகளும் பொறுப்பும்” போன்ற விடயங்கள் தொடர்பில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பதவியணியினர் பங்குபற்றினர்.

மேலும் “வினைமுயலுமை கருத்திட்டங்கள் மற்றும் நிறுவக ரீதியிலான முகாமைத்துவம் பற்றிய சர்வதேச பயிற்சிப்பட்டறை” எனும் தலைப்பிலான நிகழ்ச்சித்திட்டத்தில் நான்கு உத்தியோகத்தர்களும் மற்றும் “சாரதிகளின் கடமைகளும் பொறுப்புகளும்” எனும் தலைப்பிலான கருத்திட்டத்தில் மூன்று உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

2.16 நிதியியல் மூலதன வளர்ச்சி

மூலதன ஒதுக்கீடு





2.17 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு சொந்தமான தனித்தன்மை கொண்ட புலமைச் சொத்துக்கள்



புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை



தேசபந்து கலாநிதி. என்.எம்.எஸ். குலசிங்க ஞாபகார்த்த முத்திரை



தேசிய புத்தாக்க கண்காட்சியம்



சர்வதேச புத்தாக்க சங்க உறுப்புரிமை



Membership of World Innovation and Intellectual Property Society



